# ஓ. பன்னீர்செல்வம் கிறிஸ்துமஸ் வாழ்த்து...

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற உயரிய வாழ்க்கை நெறிகளை மக்கள் பின்பற்றி ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி வாழ்ந்தால் வாழ்வு மேன்மையுறும்.

**ஜெயலலிதா வழங்கிய சலுகை**

புரட்சித்தலைவி அம்மா கிறிஸ்துவப் பெருமக்களின் நலனிற்காக, இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழகத்தைச் சேர்ந்த கிறிஸ்துவ மக்கள் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேம் புனிதப் பயணம் செல்வதற்கு 20 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டத்தினை டிசம்பர் திங்கள் 2011–ம் ஆண்டு செயல்படுத்தினார். கிறிஸ்துவ மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் இதுவரை 2,340 பேர் ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொண்டு பயனடைந்துள்ளனர்.

கிறிஸ்துவப் பெருமக்களின் மேம்பாட்டுக்கென புரட்சித்தலைவி அம்மா வகுத்த சீரிய திட்டங்களை, புரட்சித்தலைவி அம்மா காட்டிய வழியில் செயல்படும் நம் அம்மாவின் அரசு சிறப்பான முறையில் தொடர்ந்து செயல்படுத்தும் என்று உறுதி கூறி, இயேசுபிரான் பிறந்த கிறிஸ்துமஸ் திருநாளில், உலகமெங்கும் அன்பும் அமைதியும் நிலவட்டும், நலமும் வளமும் பெருகட்டும் என்று வாழ்த்தி, கிறிஸ்துவப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது உளம் கனிந்த கிறிஸ்துமஸ் திருநாள் நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இவ்வாறு முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

# குடிநீரில் டீசல் கலந்ததால் டமாஸ்கஸ் மக்கள் தவிப்பு

டமாஸ்கஸ்,டிச.24–

சிரியா நாட்டின் தலைநகரான டமாஸ்கஸ் நகருக்கு குடிநீர் வழங்கும் நீர்நிலைகளில் அரசுக்கு எதிரான போராளிகள் டீசலை கலந்ததால் அங்கு வாழும் மக்கள் பெரும் தவிப்புக்கு ஆளாகியுள்ளனர். சிரியாவில் தற்காலிக போர் நிறுத்தத்தை இருதரப்பினரும் திடீரென்று ரத்து செய்ததால் அலெப்போ நகரை விட்டு வெளியேற முடியாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் தவிப்புடன் காத்திருக்கின்றனர்.

சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்தை பதவியில் இருந்து நீக்குவதற்காக கடந்த ஆறாண்டுகளாக உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அங்குள்ள கிழக்கு அலெப்போ நகரை கிளர்ச்சியாளர்களிடம் இருந்து மீட்பதற்காக கடுமையான சண்டை நடந்து வந்தது. நகரின் பெரும்பான்மையான பகுதிகளை அதிபர் பஷார் அல் ஆசாத்தின் படைகள் மீட்டு விட்டன.

நெடுநாட்களாக போராளிகள் வசம் சிக்கியிருந்த அலெப்போ நகரையும் அரசுப்படைகள் சமீபத்தில் கைப்பற்றியுள்ளன. இதனால் ஆத்திரமடைந்த போராளிகள் அந்நாட்டின் தலைநகரான டமாஸ்கஸ் நகருக்கு குடிநீர் வழங்கும் நீர்நிலைகளில் டீசலை கலந்ததால் அங்கு வாழும் மக்கள் பெரும் தவிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

# புயல் பாதித்த திருவள்ளூர் மாவட்ட நிவாரணப் பணிகள்: அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, கே.பி.அன்பழகன், சி.விஜயபாஸ்கர், பா.பெஞ்சமின் நேரில் ஆய்வு





திருவள்ளூர், டிச. 24–

வார்தா புயலால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகள் குறித்து சோழவரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, கே.பி.அன்பழகன், சி.விஜயபாஸ்கர், பா.பெஞ்சமின் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

இக்கூட்டத்தில் கண்காணிப்பு அலுவலர் ஜித்தேந்திரநாத் ஸ்வைன், மாவட்ட கலெக்டர் எ.சுந்தரவல்லி, பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் சிறுணியம் பி.பலராமன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் வர்தா புயல் பாதிப்பினைத் தொடர்ந்து தமிழக அரசின் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, கே.பி.அன்பழகன், ஆர்.காமராஜ், சி.விஜயபாஸ்கர் வெல்லமண்டி என். நடராஜன், கே.பாண்டியராஜன், பா.பெஞ்சமின் ஆகியோர்களின் தலைமையில் மாவட்ட கலெக்டர் சுந்தரவல்லி, கண்காணிப்பு அலுவலர்கள் ஜித்தேந்திரநாத் ஸ்வைன் மேற்பார்வையில் மறுசீரமைப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ வர்தா புயலால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர் மாவட்டத்தில் ஆவடி, திருவள்ளூர், திருத்தணி, திருவேற்காடு மற்றும் பூந்தமல்லி, ஆகிய நகராட்சிகளில் மொத்தம் உள்ள 135 வார்டுகளில் 135 வார்டுகளிலும் மின்சாரம் சீர்செய்யப்பட்டு 100% மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. 10 பேரூராட்சிகளில் உள்ள 165 வார்டுகளில் 165 வார்டுகளில் மின்சாரம் சீர்செய்யப்பட்டு 100% மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. 526 ஊராட்சிகளில் 476 ஊராட்சிகளில் முழுமையாகவும், 50 ஊராட்சிகளில் பகுதியாகவும் மின்சாரம் சீர்செய்யப்பட்டு 92% மின்விநியோகம் வழங்கப்பட்டுள்ளது.

★ மாவட்டத்தில் உள்ள 526 பஞ்சாயத்துக்களில் மொத்தமுள்ள 1,38,236 தெரு விளக்குகளில், 46,627 தெரு விளக்குகள் மற்றும் 2,203 மின் சாதனங்கள் சேதமடைந்துள்ளன.

மின்சாரவாரிய அலுவலர்களை கொண்டு மாவட்டம் முழுவதும் மின் சீரமைப்பு பணிகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு, மின்சாரம் வழங்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றது. புயலால் பாதிக்கப்பட்ட 18,681 மின் கம்பங்கள் மற்றும் 116 மின்மாற்றிகளில்,இதுவரை 15,772 மின்கம்பங்கள் மற்றும் 79 மின்மாற்றிகள் மாற்றப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளன. கரூர், சேலம், நாமக்கல், பெரம்பலூர், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலிருந்து ஒயர்மேன், ஹெல்பர், உதவிப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகியோர்கள் அடங்கிய 3,899 நபர்களைக் கொண்ட குழு வரப்பெற்றுள்ளது. மொத்தம் 4,312 பணியாளர்கள், 144 ஜேசிபி இயந்திரங்கள் மற்றும் 272 லாரிகளைக் கொண்டு, மின்சார மறுசீரமைப்பு பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

★ மாவட்டத்தில் உள்ள 526 ஊராட்சிகளில் 510 ஜெனரேட்டர்கள் மற்றும் 312 குடிநீர் டேங்கர் லாரிகளை பயன்படுத்தி 526 ஊராட்சிகளுக்கும் தடையின்றி குடிநீர் வழங்கப்படுகிறது. திருவள்ர் மாவட்டத்தில் உள்ள 10 பேரூராட்சிகள், 5 நகராட்சிகளில் 4 ஜெனரேட்டர்கள் மற்றும் மின்சார வாரிய மின்சாரம் மூலம் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் நீரேற்றியும், 131 குடிநீர் டேங்கர் லாரிகளை பயன்படுத்தியும் தங்குதடையின்றி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

★ திருவள்ர் மாவட்டத்தில் நடைபெற்ற 116 மருத்துவ முகாம்களில், 63 மருத்துவர்களைக் கொண்டு பொதுமக்களுக்கு சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, இதுவரை 49,844 நபர்கள் பயனடைந்துள்ளனர். மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் சுகாதாரத்தை பேணும் வகையில் கொசுமருந்து தொடர்ந்து அடிக்கப்பட்டு வருகிறது. மேலும் நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

★ 64 குழுக்கள் அமைக்கப்பட்டு 433 நீர்நிலைகள் மற்றும் 154 வாகனங்களில் குடிநீர் குளோரினேட் செய்யப்பட்டது. 23 புகை தெளிப்புக் குழுக்கள் மூலம் 122 பகுதிகளில் புகை தெளிப்பு செய்யப்பட்டுள்ளது.

★ மாவட்டத்திலுள்ள 526 கிராம ஊராட்சிகளிலும் முழுமையாக சுத்தம் செய்யும் பணிகள் 19.12.2016 முதல் 23.12.2016 வரை 5 நாட்களுக்கு நடைபெற்றது. 104 ஊராட்சிகளில் 14,770 பணியாளர்களால் சுத்தம் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

★ புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளானபழவேற்காடு, பொன்னேரி மற்றும் கும்மிடிப்புண்டி ஆகிய இடங்களில் உள்ள மக்களுக்கு 30,000 உணவு பொட்டலங்கள் நேரடியாக அவர்களது குடியிருப்புகளிலேயே வழங்கப்பட்டன.

★ நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளில் உள்ள 2000 பணியாளர்களை கொண்டும் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட 167 பணியாளர்கள் மற்றும் 65 நவீன கருவி கொண்டும், மரக்கிளைகள் மற்றும் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. அவ்விடங்களில் பிளீச்சிங் பவுடர் தெளிக்கப்பட்டு சுகாதாரமான முறையில் தூய்மைப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

★ வர்தா புயலினால் 68,107 வீடுகள் சேதமடைந்துள்ளன. 79 கால்நடைகள் மற்றும் 19,279 வாத்துகள் மற்றும் கோழிகள் உயிரிழந்துள்ளன.

★ வர்தா புயல் பாதிப்பு தொடர்பாக, பொன்னேரி சார் ஆட்சியர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. தொலைபேசி எண் 04427974073. மேலும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலும் கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. தொலைபேசி எண் 04427664177, 04427661200. கட்டணமில்லா தொலைபேசி எண் 1077.



சென்னை கோ–ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஓ.எஸ். மணியன் உதவி விற்பனையாளர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஹர்மந்தர் சிங், கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர் முனியநாதன், கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் டி.என். வெங்கடேஷ் ஆகியோர் உள்ளனர்.

# ராம மோகனராவுக்கு 'திடீர்' உடல்நலக்குறைவு: மருத்துவமனையில் அனுமதி

சென்னை,டிச.24–

ராமமோகன ராவுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதால் போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக முன்னாள் தலைமைச் செயலாளர் ராம மோகனராவ் அவரது மகன் விவேக் மற்றும் குடும்பத்தினர் வீடு, அலுவலகங்களில் கடந்த 21ந்தேதி வருமான வரித்துறையினர் அதிரடி சோதனை நடத்தினார்கள். இதன் தொடர்ச்சியாக ராம மோகனராவ், அவரது மகன் விவேக் ஆகியோருக்கு வருமான வரித்துறையினர் சம்மன் அனுப்பி உள்ளனர். ஆனால் நேற்று இருவரும் சம்மனுக்கு ஆஜராகவில்லை. விவேக் மனைவிக்கு உடல்நலம் இல்லை என்று வருமான வரித்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இன்று ஆஜராவார்களா என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் ஆஜராகாவிட்டால் கைதாகும் வாய்ப்பு இருப்பதாகதகவல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் ராம மோகன ராவ் இன்று காலை திடீரென்று போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

### பாலஸ்தீன மண்ணில் குடியிருப்பு பகுதி

# ஐ.நா.சபையில் இஸ்ரேலுக்கு எதிரான தீர்மானம் வெற்றி

நியூயார்க்,டிச.24–

**பாலஸ்தீன மண்ணில் இஸ்ரேல் அரசு அமைத்துவரும் குடியிருப்பு பகுதி தொடர்பான கட்டுமானப் பணிகளை தடுத்து நிறுத்தும் தீர்மானம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் நிறைவேற்றப்பட்டது.**

1967ஆம் ஆண்டு நடந்த நீண்ட போரின் இறுதியில் பாலஸ்தீன நாட்டில் இருந்து கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் அடாவடியாக பறித்தது. இப்பகுதியை இஸ்ரேலுக்கு சொந்தமானதாக சர்வதேச நாடுகள் அங்கீகரிக்கவில்லை. சமீபகாலமாக, பாலஸ்தீன நாட்டுக்கு உட்பட்ட பகுதியில் கிழக்கு ஜெருசலேமிற்கு நெருக்கமாக இஸ்ரேல் கட்டிவரும் சட்டவிரோத குடியிருப்பு (செட்டில்மென்ட்) வீடுகள் பிராந்தியத்தின் அமைதிக்கு முக்கிய அச்சுறுத்தலாக அமையலாம் என்று உலக நாடுகள் அச்சப்பட்டன.

இஸ்ரேல் மற்றும் அதன் அண்டைநாடான பாலஸ்தீனத்துக்கு இடையேயான பிரச்சினைக்கு முடிவுகட்டும் 'இரு நாடுகள்' என்ற தீர்விற்கு முக்கிய தடையாக இஸ்ரேல் கட்டி வரும் குடியிருப்புகள் அமைந்துள்ளன. இரு நாடுகள் பரிகாரத்தை சாத்தியமற்றதாக மாற்றவேண்டும் என்பதே இஸ்ரேலின் எண்ணமாக உள்ளது என்று ஐரோப்பிய யூனியன் வெளியிட்ட அறிக்கை சுட்டிக்காட்டியது.

ஹார்ஹோமா, கிலோ, கிவாத் ஹமடோஸ் ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவந்த குடியிருப்பு கட்டுமானங்கள் மட்டுமின்றி, இவ்வாண்டு இறுதியில் கிழக்கு ஜெருசலேம் மற்றும் பெத்லஹமிற்கு இடையே மேலும் சில குடியிருப்புகளை கட்டும் பணிகளை துவக்க இஸ்ரேல் முயற்சிப்பதாக அவ்வறிக்கை தெரிவித்திருந்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதியில் 5 ஆயிரம் குடியிருப்புக்களை கட்டுவதற்கான இஸ்ரேலின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும், சர்வதேச எல்லைக்கோட்டு சட்டத்தை மீறிய வகையில் அப்பகுதியில் நடந்துவரும் கட்டுமானப் பணிகளை எல்லாம் உடனடியாக தடுத்து நிறுத்தவும் நியூசிலாந்து, மலேசியா, வெனிசுலா, செனெகல் ஆகிய நாடுகளின் சார்பில் நேற்று ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தின்மீது ஐ.நா. பாதுகாப்பு சபையில் அங்கம்வகிக்கும் 15 நாடுகளும் வாக்களிக்க இருந்த நிலையில், தனது வெட்டுரிமை (வீட்டோ) அதிகாரத்தை அமெரிக்கா பயன்படுத்தி மேற்கண்ட தீர்மானத்தை நீர்த்துப்போக வைக்க வேண்டும் என அமெரிக்காவின் வருங்கால அதிபர் டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தி இருந்தார்.

ஆனால், தற்போதைய அதிபர் பராக் ஒபாமா தலைமையிலான அமெரிக்க அரசு அவரது ஆலோசனையை நிராகரித்தது. இஸ்ரேலுக்கு எதிரான இந்த தீர்மானத்தை ஆதரித்தோ, எதிர்த்தோ வாக்களிக்காமல் அமெரிக்கா நடுநிலை வகித்தது. இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்பு சபையில் மொத்தம் உள்ள 15 நாடுகளில் 14 நாடுகளின் அமோக ஆதரவுடன் இஸ்ரேலுக்கு எதிரான இந்த தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியை பாலஸ்தீன அரசு கொண்டாடிவரும் அதேவேளையில், தன்னை கைவிட்ட அமெரிக்காவுக்கு இஸ்ரேல் அரசு கண்டனம் தெரிவித்துள்ளது. எங்கள் நாட்டுக்கு எதிராக நிறைவேற்றப்பட்டுள்ள இந்த தீர்மானத்துக்கு நாங்கள் கட்டுப்பட மாட்டோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலை கட்டுப்படுத்தக்கூடிய இந்த தீர்மானம் வாக்கெடுப்பில் வெற்றி பெற்றது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அமெரிக்காவின் வருங்கால அதிபர் டொனால்ட் டிரம்ப், வரும் ஜனவரி மாதம் 20ம் தேதிக்கு பிறகு காட்சிகள் மாறும் என கூறியுள்ளார்.

# சென்னை கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள்: முதல் 3 இடம் வென்றவர்களுக்கு ரொக்கப்பரிசு

## அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் வழங்கினார்

சென்னை, டிச. 24–

தமிழ் வளர்ச்சித் துறையால் சென்னை மாவட்ட அளவிலான கல்லூரி மாணவர்களுக்கு 2016–2017ம் ஆண்டிற்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நேற்று சென்னை காயிதே மில்லத் மகளிர் கலைக்கல்லூரியில் நடைப்பெற்றது. இதில் கவிதைப் போட்டியில் எழும்பூர் எத்திராஜ் மகளிர் கல்லூரியில் முதுகலை முதலாமாண்டு விலங்கியல் மாணவி ஸ்ரீதேவி முதல் பரிசையும், தேனாம்பேட்டை நீதிபதி பசீர் அகமது சையது மகளிர் கல்லூரி இளங்கலை அரசியல் அறிவியல் மூன்றாமாண்டு மாணவி ஐஸ்வர்யா இரண்டாம் பரிசையும், ராயப்பேட்டை புதுக்கல்லூரி இரண்டாமாண்டு முதுகலை வேதியியல் பயிலும் மாணவன் மு. திவாகர் மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

கட்டுரைப் போட்டியில் கே.கே. நகர் இ.எஸ்.ஐ.சி மருத்துவக் கல்லூரியில் இரண்டாமாண்டு மருத்துவம் பயிலும் மாணவி ச. பிரீத்தி முதல் பரிசையும், சென்னை மதராஸ் தொழில்நுட்ப நிறுவனக் கலைக் கல்லூரியில் முதலாமாண்டு மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் பயிலும் மாணவன் க. அருண்பாலாஜி இரண்டாம் பரிசையும், சென்னை வள்ளியம்மாள் கல்லூரியில் இளம் அறிவியல் உயிர்வேதியியல் பயிலும் மாணவி லோ.வைத்தீஸ்வரி மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

பேச்சுப் போட்டியில் சென்னை, மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் கல்லூரியில், மூன்றாம் ஆண்டு துணை மருத்துவம் பயிலும் மாணவன் நா.அருண் முதல் பரிசையும்,சென்னை துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டு இளம் அறிவியல் வேதியியல் பயிலும், மாணவன் மா. மதன் குமார் இரண்டாம் பரிசையும், மயிலாப்பூர், ராணிமேரிக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல் பயிலும் மாணவி மோ.காயத்திரி மூன்றாம் பரிசையும் பெற்றனர்.

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் சேவூர் ராமச்சந்திரன் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்குச் சென்னை மாவட்டத் தமிழ்வளர்ச்சித் துணை இயக்குநர் (பொறுப்பு) ம.சி. தியாகராசன் வரவேற்புரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் (பொறுப்பு) முனைவர் கோ. விசயராகவன் தலைமையுரையும் ஆற்றினார்கள். ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு ரூ.10 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ. 7 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ.5 ஆயிரம் ஆகும். மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்ற மாணவர்கள் மட்டும் மாநில அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வர்.


**எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்**

equitas

CIN: U65100TN2007PLC064069

பதிவு அலுவலகம்: 410A, 4வது மாடி, ஸ்பென்சர் ப்ளாசா, ஃபேஸ் 2, எண். 769, மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 2.

தொ.பே: 044-42995000 | தொலைநகல்: 044-42995050

www.equitas.in | மின் அஞ்சல்: secretarial@equitas.in

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015–ன், விதி 29 மற்றும் விதி 47ன் படி, டிசம்பர் 31, 2016 அன்று முடிவடையும் மூன்று மாத காலாண்டு தனிப்பட்ட மற்றும் ஒட்டு மொத்த தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகள் மற்றும் இதர விஷயங்களைப் பரிசீலிக்க, பிப்ரவரி 1, 2017 புதன்கிழமை அன்று நிறுவன இயக்குனர்களின் கூட்டம் நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு, நிறுவனத்தின் இணையதளம் www.equitas.in மற்றும் பங்குச் சந்தை இணையதளங்களில் www.bseindia.com மற்றும் www.nseindia.com உள்ளது.

எக்விடாஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்க்காக

(ஒப்பம்)

இடம்: சென்னை

தேதி: டிசம்பர் 23, 2016

திருமதி. ஜெயஸ்ரீ சு அய்யர், நிறுவன செயலர்



**KARAIKUDI MUNICIPALITY**

**Tender Notification**

Roc.No.7613/2016/E1

**Request for Tenders in two stages (Technical bid and Price bid) are invited for the following work:**

1) To operate and maintain a Mixed Municipal Solid Waste Processing Plant of 50 MT/per day in Karaikudi Municipality Compost Yard.

2)Bid documents available at free of cost in the web site **http://tntenders.gov.in** and **http://municipality.tn.gov.in/tenders**

3) Bid submission : **Up to 15.00 hrs on 19.01.2017**

Bid Opening : **15.30 hrs on 19.01.2017**

4) In the event of specified date for submission of bids is declared a holiday, bids will be received and opened on the next working day at the same time and venue.

**Commissioner**
**Karaikudi Municipality**

DIPR.4852/TENDER/2016



**டெசிமஸ் பைனான்ஷியல் லிமிடெட்**

**ஏல அறிவிப்பு**

கீழ்க்குறிப்பிட்டவர்கள் மெசர்ஸ் டெசிமஸ் பைனான்ஷியல் லிமிடெட்டின் கீழ்க்கண்ட கிளையில் நகைக் கடன் கணக்கு வைத்துள்ளார்கள்.

**முகப்பேர் கிளை :** அரவிந்த் பிளாசா, முதல் தளம் PC–9, பிளாக்–2, கதவு எண். F–7, கம்பர் தெரு, முகப்பேர் பஸ் நிலையம் எதிரில், முகப்பேர் மேற்கு, சென்னை–600 037.

**தி நகர் கிளை:** பழைய எண். 10, புதிய எண். 19, ப்ளாட் எண். 5, 2வது தளம், பசுல்லா ரோடு, தி.நகர் (ஐசிஐசிஐ வங்கி எதிரில்) சென்னை–600 017.

**சென்னை – முகப்பேர்**

| வாடிக்கையாளர் பெயர் | கடன் எண். |
|---|---|
| மணிகண்டன் G | 56586 |
| பத்மாவதி S | 61693 |
| லதா G | 61705 |
| திலீபன் R | 56587 |
| புருஷோத்தமன் S | 61671 |

**சென்னை –தி நகர்**

| வாடிக்கையாளர் பெயர் | கடன் எண். |
|---|---|
| மோகன் ராஜ் A | 56290 |
| சுகுமார் M | 58005 |
| கயல்விழி U | 58032, 58067 |
| பாஸ்கரன் P | 58038, 58039 |
| மணிவண்ணன் P | 58043, 58044 |
| சுரேஷ்பாபு D | 58049, 58050 |
| வேலவன் K | 58060, 58061 |
| அரவிந்தன் S | 58062 |

கிளை மேலாளர் :– சுகுமார் M

தொடர்பு எண்: 9344215506

டெசிமஸ் பைனான்ஷியல் லிமிடெட்டுடன் கையெழுத்திட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை கடைப்பிடிக்காத இந்த வாடிக்கையாளர்களின் நகைகள் ஏலம் விடப்படும். டெசிமஸ் அவர்களுக்கு அறிவிப்புகள் / நினைவூட்டல்களை அனுப்பியும் அவர்களிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. **31 டிசம்பர், 2016** அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பழைய எண். 10, புதிய எண். 19, ப்ளாட் எண். 5, 2வது தளம், பசுல்லா ரோடு, தி.நகர் (ஐசிஐசிஐ வங்கி எதிரில்) சென்னை–600 017 என்ற முகவரியில் ஏலம் நடைபெறும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கண்ட முகவரியில் உள்ள அலுவலகத்தில் ஏல விதிகள் இருக்கும்.

ஆணைப்படி–
டெசிமஸ் பைனான்ஷியல் லிமிடெட்



பிற்சேர்க்கை *IV*

(விதி 8 (1) பார்க்கவும்)

**உடைமை அறிவிக்கை**

(அசையா சொத்துக்காக)

அவ்வாறிருக்கையில்,

கீழே கையொப்பமிடப்பட்டுள்ள **இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (CIN: L65922DL2005PLC136029)** அங்கீகாரம் பெற்ற அதிகாரி செக்யூரிடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் ஃபைனான்ஸியல் அசெட்ஸ் மற்றும் என்ஃபோர்ஸ்மென்ட் ஆஃப் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் ஆக்ட், (சட்டம், 2002 (2002-ன் 54) கீழ் மற்றும் பிரிவு 13(12) விதி 3, கீழ் செக்யூரிட்டி இண்டரெஸ்ட் என்ஃபோர்ஸ்மென்ட் (விதி, 2002 உடன் வாசிக்கப்பட்டு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் நடைமுறைப்படி கடனாளிகள் குறிப்பிடப்பட்ட நோட்டீஸை 07.06.2013 பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் உண்மையாக பணம் செலுத்தும் தேதி வரை கடன் ஆவணங்களின் விதிமுறைகளின்படி 05.06.2013ம் தேதியிலிருந்து இதர கட்டணங்கள் மற்றும் ஆண்டுக்கு @13.25% எதிர்கால வட்டியுடன் 06.06.2013 தேதியின்படி கடன் கணக்கு எண்: **HLAPCHE00109347**-ல் உள்ள, நோட்டீஸில் குறிப்பிடப்பட்ட **ரூ.33218047/- (மூன்று கோடியே முப்பத்து இரண்டு லட்சத்து பதினெட்டாயிரத்து நாற்பத்தியேழு மட்டும்) M/s ஷைன்கார்மென்ட்ஸ் (உரிமையாளர்கள் மூலமாக) திரு. பிரான்சிஸ் ஜார்ஜ் மற்றும் லின்சி ஜார்ஜ்** மற்றும் செலுத்த வேண்டும்.

கடன் வாங்கியவர் தொகையை திருப்பிச் செலுத்த தவறிவிட்டார் என்பதால் கடன் வாங்கியவருக்கும் பொதுமக்களுக்கும் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற அதிகாரி ஏற்கனவே இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தை சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(4)-ன் கீழாக, விதி 8 உடன் படிக்கவும், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி கையகப்படுத்தியுள்ளார் மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(4)-ன் கீழாக, விதி 8 உடன் படிக்கவும், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி சொத்தின் மீதியுள்ள கையகப்படுத்தும் பணி 19.12.2016 அன்று மேற்கொள்ளப்பட்டது, இதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மொத்த சொத்தையும் கையகப்படுத்தியுள்ளார்.

இந்த சொத்தை வாங்குபவர்கள் மற்றும் இந்தச் சொத்துடன் செய்யப்படும் ஏதாவது நடவடிக்கை, உண்மையாக பணம் செலுத்தும் தேதி வரை கடன் ஆவணங்களின் விதிமுறைகளின்படி 28.11.2016ம் தேதியிலிருந்து இதர கட்டணங்கள் மற்றம் ஆண்டுக்கு @14.50% எதிர்கால வட்டியுடன் 29.11.2016 தேதியின்படி உள்ள, நோட்டீஸில் குறிப்பிடப்பட்ட **ரூ. 5,45,34,497/- (ஐந்து கோடி நாற்பத்தைந்து லட்சத்து முப்பத்திநான்கு ஆயிரத்து நானூற்று தொண்ணூற்றேழு மட்டும்) இந்தியாபுல்ஸ் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**-க்கு செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பது கடன் பெற்றோருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது. எடுக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுப்பெற கிடைக்கும் காலத்தைப் பொறுத்தவரை சட்டத்தின் 13 வது பகுதியின் துணைப் பிரிவின் (8) விதிமுறைகளை கடன் பெற்றவர் கவனிக்க வேண்டும்.

**அசையா சொத்தின் விவரம்:**

சொத்து முழுவதும் பகுதி உடைமை இருப்பது பழைய கதவு எண்: 18, **புதிய கதவு எண்: 2, பாஸ்கரா சாஸ்திரி தெரு (சையது கான் கார்டன் என்று அழைக்கப்படும், 1 வது தெரு), புலியூர், ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024-ல் உள்ள வீடு, தோட்டம் மற்றும் கட்டிடம் பைமாஷ் எண்கள் 1033 முதல் 1039 வரை, டி.எஸ் எண் 14/9-I (டி.எஸ் எண் பதிநான்கு/ ஒன்பது) பிளாக் எண்:48 உள்ளடக்கியது, 3800 சதுர அடி கொண்டது, நான்குமால் தெற்கே டி.எஸ் எண் 14/11 மற்றும் பாஸ்கரா சாஸ்திரி தெரு (சையது கான் கார்டன் 1வது தெரு என்றும் அழைக்கப்படுவது), கிழக்கே டி.எஸ். எண் 14/10 மற்றும் பாஸ்கரா சாஸ்திரி தெருவில் கதவு எண் 19 கொண்ட கட்டிடம், மேற்கே டி.எஸ். எண் 14/8 மற்றும் பாஸ்கரா சாஸ்திரி தெருவில் கதவு எண் 17 கொண்ட கட்டிடம் மற்றும் வடக்கே டி.எஸ் எண் 14/2 மற்றும் வசிக்கும் வீடு.**

**இந்த சொத்தானது கீழ்க்கண்டவாறு வருகிறது:**

வடக்கு திசை : விற்பனை பத்திரத்தின் படி | கிழக்கு திசை : விற்பனை பத்திரத்தின் படி

தெற்கு திசை : விற்பனை பத்திரத்தின் படி | மேற்கு திசை : விற்பனை பத்திரத்தின் படி

sd/-

தேதி: **19.12.2016**

இடம்: **சென்னை**

**அங்கீகாரம் பெற்ற அதிகாரி**
**இந்தியாபுல்ஸ் ஹவுஸிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**